செ.வெ.எண்: 322 நாள்: 16.05.2020

**ஒரத்தநாடு வட்டம், ஒக்கநாடு கீழையூர் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த திருமதி.சரோஜா என்பவரின் குடும்பத்தினருக்கு ரூபாய் 5,25,000 த்திற்கான காசோலையினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் வழங்கினார்**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒக்கநாடு கீழையூர் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த திருமதி.சரோஜா என்பவரின் குடும்பத்தினருக்கு ரூபாய் 5,25,000 த்திற்கான காசோலையினை மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஆர்.வைத்திலிங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் இன்று(16.05.2020) வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒக்கநாடு கீழையூர் தெற்குத் தெருவைச் சேர்ந்த திரு.செல்லப்பன் என்பவரின் மனைவி திருமதி.சரோஜா என்பவர் கடந்த 12.05.2020 அன்று ஒக்கநாடு கீழையூர் கிராமத்தில் தன்னுடைய பசு மாட்டினை மேய்த்துக்கொண்டிருக்கும்போது, எதிர்பாராத விதமாக அறுந்து கிடந்த மின் கம்பியில் கால் வைத்ததால், திருமதி.சரோஜா அவர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். மேலும், அவரது பசுமாடும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தது.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திருமதி.சரோஜா அவர்களின் கணவர் திரு.செல்லப்பன் என்பவரை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் ஆகியோர் இன்று(16.05.2020) நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பில் தமிழ்நாடு மின்வாரிய இழப்பீட்டு நிதியிலிருந்து கால்நடை உயிரிழப்பிற்கான நிவாரணத் தொகையையும் சேர்த்து மொத்தம் ரூபாய் 5,25,000 த்திற்கான காசோலையினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திரு.செல்லப்பன் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மேற்பார்வை பொறியாளர் திருமதி.விஜயகௌரி, தஞ்சாவூர் வருவாய் கோட்ட அலுவலர் திருமதி.வேலுமணி, ஒரத்தநாடு வட்டாட்சியர் திரு.அருள்ராஜ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக செயற்பொறியாளர் திருமதி.விமலா, உதவி செயற்பொறியாளர் திரு.கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.